**மாத்தறை மாநகர சபை**

**மாத்தறை மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 09 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 22 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மாத்தறை மாநகர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 209,357 இற்கான 8 சொத்து விடயங்களின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள இறுதி இருப்பு ரூபா 9,748,721 தொகை எனினும் பட்டோலையின் பிரகாரம் அதனது பெறுமதி ரூபா 5,251,786 என காணப்பட்டமையால் ரூபா 4,496,935 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2013 அக்டோபர் 22 திகதி ஏல விற்பனை மேற்கொள்ளப்பட்டு சொத்துக்களில் அகற்றப்பட்ட 20 பண்டங்களை சேர்ந்த 195 அலகுகளின் கொள்வனவு பெறுமதி நிலையான சொத்துக்கள் கணக்கு செலவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலின் வருமானத்தின் பங்களிப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் மிகையாக பெறுவனவு ரூபா 19,697 தொகை காணப்பட்டது. இத் தொகையை நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது அமைய மற்றும் பிரதியீட்டு ஊழியர்கள் 22 பேரை நிரந்தர பதவியில் அமர்த்தும் போது ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு என செலுத்தியிருந்த ரூபா 2,658,411 தொகை சபைக்கு மீளப் பெற வேண்டியிருந்த போதும் அத் தொகை கணக்குகளில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையினால் முன்னைய ஆண்டின் போது கலஞ்சியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்த வழங்கள் கட்டளை 08 இன் பெறுமதி ரூபா 277,550 மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) மீளாய்வாண்டின் போது தென்மாகாண அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் சபைக்கு கொள்வனவு செய்திருந்த 10 டிரைசிகள் வண்டிகளின் பெறுமதி ரூபா 2,680,000 தொகையினை மோட்டார் வாகனம் மற்றும் மாட்டுவண்டி கணக்கின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.3 கணக்குகளில் விடுபாடுகள்

----------------------------------------

2011 ஜூன் 05 திகதி நடைபெற்ற சபை கூட்டத்தின் போது மாத்தறை மோட்டார் ஸர்விஸ் மற்றும் மோட்டவேக்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையென அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 255,290 இற்கான வாகனங்களின் திருத்தச் செலவு மீளாய்வாண்டின் போதும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் அத் தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 07 கணக்கு விடயங்கள் தொடர்பான பெறுமதி ரூபா 51,918,049 ஆக காணப்பட்டதுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்கள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் அக் கணக்குகளின் பெறுமதி ரூபா 43,397,144 ஆகக் காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 8,520,905 ஆகும்.

1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 147,664,731 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 199,546,027 ஆகும்.

(இ) ரூபா 7,705,655 இற்கான 07 கணக்கு மீதிகள் தீர்க்கப்படாமல் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------

ரூபா 284,689,953 பெறுமதியான 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாநகர சபைக் கட்டளைச் சட்டம் | |
|---|---|
| (i) பிரிவு 171 | மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து வருமானங்களையும் அறவீடு செய்வதற்கான முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) பிரிவு 218 | நகர முதல்வரினால் ஒவ்வொரு நிதியாண்டின் போதும் மாநகர சபை நிதியத்திற்கு சேகரிக்கப்பட்ட பெறுவனவுகளின் மற்றும் நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் தன்மை மற்றும் எண்ணிக்கையை காட்டக்கூடிய கூற்றொன்று தயாரிக்கப்பட்டு சபைக்கு சமர்ப்பித்தல் மற்றும் பொறுப்பான அமைச்சருக்கு சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 35,030,836 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,328,218 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| --- | --- | --- | --- |
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 38,311 | 32,487 | 43,732 |
| வாடகை | 14,319 | 16,994 | 11,138 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 11,980 | 8,174 | 914 |
| ஏனைய வருமானங்கள் | 184,453 | 100,583 | 54,698 |

2.2.2 வீதவரி

-------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீடுகள், வர்த்தக நிலையங்கள், அரசாங்க நிறுவனங்கள், மதவழிபாட்டுத்தளங்கள், தொழிநுட்பக் கல்வி நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்ட 17313 நுகர்வு இடங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீதவரித் தொகை ரூபா 43,732,995 ஆகக் காணப்பட்டது. நிலுவை அதிகரிப்பின் சதவீதம் நூற்றிற்கு 23.7 ஆகும். மேலும் 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது ஆதனத் தடைக்கான கட்டளைகள் தயாரித்தல், கட்டளைகளை கையொப்பமிடல், ஆதனங்கள் தடைசெய்யும் அலுவலர்களுக்கு அழைப்பாணைகளை வழங்கல்கள் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிலுவைத் தொகை இத் தொகையினால் அதிகரித்திருந்தது.

(ஆ) ஒவ்வொரு ஆண்டிற்குமான நிலுவைத் தொகை, பில்போடப்பட்ட தொகையில் இருந்து மீளாய்வாண்டின் போது அறவிடபபட்டிருந்த தொகை மற்றும் நிலுவைத் தொகையை இனங்காக்கூடிய விதமாக கணனி பகேஜ் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே வரி அறவீடுகளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யமுடியாதுள்ளது.

(இ) ரூபா 50,000 இனை மிகையான தொகையொன்று நிலுவையாகவுள்ள 17 நிறுவனங்களில் இருந்து மற்றும் 22 வர்த்தக நிலையங்களில் இருந்து ரூபா 4,130,222 தொகையொன்று கிடைக்க வேண்டியிருந்ததுடன் அத் தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) வீதவரி வட்டாடரங்கள் 15 இல் இருந்து வீதிவரியினை அறவீடு செய்வதற்காக ஒவ்வொரு காலாண்டின் போதும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252(1)(ஆ) பந்தியின் பிரகாரம் வெளிக்களத்தில் வரி சேகரிப்போர் 14 பேருக்கு கீழ்வருமாறு சாட்டப்பட்டிருந்த போதும் வீதவரி அறவீடு செய்வதில் காணப்பட்ட முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கவில்லை.

| காலாண்டு | அறவிடப்பட வேண்டும் என ஒப்படைத்த தொகை | அறவிட்டுள்ள தொகை | அறவீடுகளின் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | % |
| முதலாம் காலாண்டு | 16,089,268 | 909,952 | 5.6 |
| இரண்டாம் காலாண்டு | 28,454,218 | இல்லை | - |
| மூன்றாம் காலாண்டு | 30,427,402 | 710,883 | 2.3 |
| நான்காம் காலாண்டு | 35,580,461 | 198,649 | 0.55 |
| | | | 2.11 |

மேலும் மீளாய்வாண்டின் முதல் காலாண்டு மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் 6 வட்டாரங்களில் நிலுவையாக இருந்த வீதவரி அறவீடு செய்வதற்காக அட்டவணைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அபிவிருத்தி அடைந்திருந்த போதிலும், அவ் ஆதனங்களினால் வீத வரி அறவீடு செய்வதற்காக ஆதனங்கள் பெறுமதி மதிப்பீடு செய்வதில் தாமதம் ஒன்று காணப்பட்டது. கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அபிவிருத்தி அடையும் போது அதே வீச்சில் கழிவுப் பொருட்கள் சேரும் அளவும் அதிகரிக்கும். அவற்றை அகற்றுவதற்காக கணிசமான அளவு கிரயம் ஒன்று மேற்கொள்ள நேரிட்டுள்ளது. எனினும் அதற்கேற்றவாறு வீதவரி வருமானத்தை அதிகரிப்பதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

2.2.3 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

-----------------------------------------------------------------------------------

மாகாண சபையினால் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 52,478,134 தொகைக்கான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பல வருடங்களுக்கு முன்னர் ஓய்வுபெற்ற, இறப்படைந்த, சேவையை விட்டுச்சென்றுள்ள ஊழியர்களிடம் இருந்து விழா முற்பணம், இடர் கடன் விஷேட மற்றும் வெள்ள முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 331,219 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

இந்த ஊழியர்கள் ஓய்வு பெறும் போது ஓய்வூதிப் பணிக்கொடையில் இருந்து அல்லது மரணப் பணிக்கொடையில் இருந்து கடன்தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் கடன் தொகைக்கான காலப்பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் தவறியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சம்பளமற்ற விடுமுறை மற்றும் அரைச் சம்பளத்துடனான விடுமுறைகள் பெற்றுள்ள 96 ஊழியர்களிடம் ரூபா 1,587,558 தொகையொன்று

அறவிடப்படவேண்டியிருந்த போதும் அத் தொகையை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

2013 மார்ச் 31 திகதிய இலக்கம் 08/2005 கொண்ட பொது நிருவாக சுற்று நிருபத்தின் பிரிவு 11.5 இன் பிரகாரம் ஆதனக் கடனுக்காக வங்கி வட்டி சதவீதம் மற்றும் அலுவலரிடம் அறவிடப்படும் நூற்றிற்கு 4 இற்கான வட்டி வீதம் இடையிலான வித்தியாசத்தை அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,391,714 தொகையினை மீளளிப்புச் செய்திருக்கவில்லை.

3.3 காணிகள் விற்பனவு மீது வரிகள் விதித்தல்

--------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 247(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள் ஏதேனும் காணி ஒன்று விற்பனை செய்யப்படாமல் அவ் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணத்தில் இருந் நூற்றிற்கு 01 இற்கான வரி ஒன்றினை அறவீடு செய்வதற்கு சபை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் சபை அறவீடு செய்த நூற்றிற்கு 01 இற்கான வரி வருமானம் அறவீடு செய்யப்பட்டனவா என்பதை உறுதி செய்வதற்காக வருமானப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. எனவே சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணி ஏல விற்பனைகளில் குறிப்பிட்டுள்ளவாறு வரி அறவீடு செய்யப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

3.3 மனித வள முகாமைத்துவம்

---------------------------------------------------

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

-------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 09 | 04 | 05 | - |
| இரண்டாம் தர | 138 | 92 | 46 | - |
| ஆரம்ப தர | 343 | 320 | 23 | - |
| (அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 214 | - | 214 |
| | 490 | 630 | 74 | 214 |

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பதவியணி சம்பளம் மற்றும் மந்திரிமாரின் படி ஆக ரூபா 94,399,000 தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது பதவியணி சம்பளம் மற்றும் படியாக ரூபா 103,555,953 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திற்கு ரூபா 9,156,953 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

3.5 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

-----------------------------------------------------------

நகர சபைக்கு சொந்தமான கொடவில கந்தகெடியவத்த என்ற காணியில் கொம்போஸ் உற்பத்தி வேலைத்தளம் நிர்மாணித்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இதற்கான வழங்கப்பட்டுள்ள ஏற்பாடு ரூபா 13,513,230 தொகை ஒன்றாக காணப்பட்டதுடன் செலவுகள் ரூபா 6,164,145 ஆகும். செலவிடப்படாமல் மீதியாக காணப்படும் தொகை ரூபா 7,349,085 ஆகும்.

(ii) ஒரு நாளைக்கு 3.5 தொன்கள் உரம் உற்பத்தி செய்யக் கூடிய இயலுமை காணப்படும் போது விற்பனை செய்யும் பிரச்சினை காரணமாக உற்பத்தி வரையறுக்கப்பட்டதுடன் விற்பனையை அதிகரிப்பு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. கணக்கீட்டுத் தன்மையும் நல்லாட்சியும்

-----------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தறு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்